

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஆகஸ்டு 05, 2021 | புரட்சி 20 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00


## முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழக மக்களுக்கு உறுதி

# பெரியார் வழியில் இந்த சட்டமன்றம் சமூக நீதிக் குரலை தொடர்ந்து ஒலிக்கும்

***நூறு ஆண்டுகளுக்கு முன் வகுப்புரிமை சட்டத்தை அறிமுகப் படுத்திய இந்த சட்டமன்றத்தில் பெரியார் வழியில் சமூக நீதிக்கான குரல் தொடர்ந்து ஒலிக்கும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டிவிட்டரில் பதிவிட் டுள்ளார்.***

தமிழக சட்டமன்றம் நூறு ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கிறது. ‘சென்னை மாகாண’ சட்டசபைக்கு பிரிட்டிஷ் ஆட்சியில் 1920ஆம் ஆண்டு முதன்முதலாக தேர்தல் நடந்தது. அதில் நீதிக்கட்சி என்ற பார்ப்பனரல்லாதார் இயக்கம் (தென்னிந்திய நல உரிமைச் சங்கம்) வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. 1921இல் முதல் மாகாண சட்டமன்ற கவுன்சில் தொடங்கியதிலிருந்து நூற்றாண்டு காலம் முடிவடையும் வரலாற்று நிகழ்வோடு சட்டமன்றத்தில் கலைஞர் படத்திறப்பு விழாவை தமிழக அரசு நடத்தியது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கலைஞர் படத்தைத் திறந்து வைத்தார். தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் பங்கேற்றதோடு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றினார்.

நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் சென்னை மாகாண கவுன்சில் என்று அன்றைக்கு அழைக்கப்பட்ட சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சமூக சீர்திருத்த சட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் பெருமையுடன் நினைவு கூர்ந்தார். “கலைஞரின் படத்தைப் பார்க்கும்போது சர். பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் தொடங்கி, இனமானப் பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன்” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

விழாவுக்குப் பிறகு தமிழக முதல்வர் வெளியிட்ட ‘டிவிட்டர்’ பதிவில் முதல்வர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

**“நூறு ஆண்டுகளுக்கு முன் வகுப்பு வாரி இடஒதுக்கீட்டை அறிமுகப் படுத்திய இந்தச் சட்டமன்றத்தில் சமூக நீதிக்கான குரல் தொடர்ந்து ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கிறது.**

**ஏற்றத் தாழ்வுகள் மிகுந்த இந்தியச் சமூகத்தில் சமூகநீதிக்கு சோதனை வரும் போதெல்லாம் நாட்டை வழி நடத்த வேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு என்றுமே உண்டு.**

**தந்தை பெரியார் காட்டிய வழியில் தொடர்ந்து அந்தக் கடமையை செய்திடுவோம் என்ற உறுதியை நாட்டு மக்களுக்கு இன்று நான் அளித்திட விரும்புகிறேன்”** என்று குறிப்பிட்டுள்ளார்.

நீதிக் கட்சி ஆட்சியில் அன்றைய மாகாண சட்டமன்ற கவுன்சில் நிறைவேற்றிய சில முக்கிய சமூக சீர்திருத்த சட்டங்கள்.

- நாட்டிலேயே முன்னோடியாகப் பெண் களுக்கு வாக்குரிமை (10.05.1921).
- பஞ்சமர் என்ற சொல் நீக்கி ஆதிதிராவிடர் என்றழைக்கும் அரசாணை (25.3.1922).
- கல்லூரிகளில் எல்லாத் தரப்பு மாணவர் களையும் சேர்க்க குழுக்கள் அமைக்கும் அரசாணை (20.5.1922). கல்வி மறுக்கப்பட்ட பிராமணரல்லாத குழந்தைகளைத் தொடக்கப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கை (21.6.1923). புதிய பல்கலைக் கழகம் காண சட்டம் இயற்றப்பட்டது. பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாக இது காரணமாயிற்று.
- தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கல்வி நிலையங்களில் மிகுதியாகச் சேர்ப் பதற்கான நடவடிக்கை (24.9.1924).
- குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டிவிட்டு, தேவரடியார் என்று முத்திரை குத்தும் முறைக்கு முடிவு கட்டும் சட்டம் (1.1.1925).
- கோயில்களில் கொள்ளையை முடிவுக்குக் கொண்டுவர இந்து சமய அறநிலையச் சட்டம் (27.01.1925).
- சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பிராமணரல்லாத மாணவர்களைச் சேர்ப்பதற்கான உத்தரவு (15.9.1928).
- எஸ். முத்தையா முதலியாரின் முயற்சியால் முதல் இடஒதுக்கீட்டுச் சட்டம் (13.9.1928). வகுப்புவாரி ஒதுக்கீட்டுக்கான அரசாணை (27.2.1929).

- என்பவை குறிப்பிடுவதானவை.

## அவாளின் தரம் இப்படித்தான்: சட்டசபை நிகழ்வில் முதல்வர் பெயரையே இருட்டடித்த ‘தினமலர்’

***‘தினமலர்’ என்ற பார்ப்பன நாளேடு, தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற நூற்றாண்டு விழா – கலைஞர் படத்திறப்பு நிகழ்வை ‘சிறுமைப்படுத்தி’ செய்தி வெளியிட்டு தனது ‘தரம்’ இவ்வளவு தான் என்று காட்டியிருக்கிறது.***

அனைத்து ஏடுகளும் முதல் பக்கத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த இந்த செய்தியை - இரண்டாம் பக்க ‘மூலையில்’ இடம் ஒதுக்கி வெளி யிட்டிருக்கிறது. ‘சட்டசபை நூற்றாண்டு விழா; கலந்து கொண்ட ஜனாதிபதி’ என்ற தலைப்பில் வெளி வந்துள்ள செய்தியில், படம் திறக்கப்பட்ட கலைஞர் குறித்து, குடியரசுத் தலைவரோ, ஆளுநரோ நிகழ்த்திய உரையில் ஒரு வரி கூட இடம் பெறவில்லை. குடியரசுத் தலைவர், ஆளுநர் படங்கள் மட்டுமே இடம் பெறுவது போல ஒரு படத்தை வெளியிட்டுள்ளது. முதல்வர் படம் தவறியும் இடம் பெற்று விடக்கூடாது என்பதில் குறியாக இருந்து படத்தை வெளியிட்டிருக்கிறது.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இந்த விழாவில் பங்கேற்றோர் என்றோ பேசினார் என்றோ ஒரு வரி கூட இடம் பெறவில்லை. அவரது பெயரை இருட்டடித்து, தனது ‘தரம்’ எவ்வளவு கேவலமானது என்பதை உணர்த்தியிருக்கிறது, ‘தினமலர்’.

### திராவிடர் விடுதலைக் கழகத்தின் 250 வெளியீடுகள்

## ‘அமேசான் கிண்டிலில்’ பெரியார் நூல்கள்: இளைஞர்களிடம் அமோக வரவேற்பு

அமேசான் கிண்டிலில் பதிவிறக்கம் செய்ய

திராவிடர் விடுதலைக் கழகம் அமேசான் கிண்டிலில் பெரியாரின் எழுத்து பேச்சுகளடங்கிய ‘குடிஅரசு’ இதழ்களின் கட்டுரைத் தொகுப்புகள், பெரியாரின் நூல்கள் - பெரியாரின் சிந்தனை - திராவிடர் இயக்க வரலாறு; திராவிட இயக்கத்தின் மீதான குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புகள், பெண் விடுதலை, ‘நிமிர்வோம்’ மாத இதழ் தொகுப்புகள் என 250க்கும் மேற்பட்ட நூல்கள் - வெளியீடுகளை விற்பனைக்கு வைத்துள்ளது. ஏராளமான இளைஞர்கள் படித்து - பதிவிறக்கம் செய்து வருகிறார்கள். சுமார் 250 நூல்கள் இடம் பெற்றுள்ளன.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் இணைய தளத்தில் (www.dvkperiyar.com) நூல்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நூல்களைத் தேட நூல்களின் தலைப்புகள் மட்டுமல்லாமல், ‘DVK Periyar’ என்றோ, கொளத்தூர் மணி என்றோ, விடுதலை இராசேந்திரன் என்றோ தேடலாம்.

தலையங்கம்

## மூன்று முக்கிய வழக்குகள்

மருத்துவம், மருத்துவ உயர் பட்டப் படிப்புகளில் அகில இந்தியா கோட்டாவுக்கு ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ளும் இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை நிரப்ப முடியாது என்று சண்டித்தனம் செய்து வந்தது ஒன்றிய அரசு. கடந்த ஆண்டு இந்த இட ஒதுக்கீடு நிரப்பப்படவேயில்லை. இதை எதிர்த்து சட்டப் போராட்டம் நடத்தியது மு.க ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு. அச்சட்டப் போராட்டத்தில் இப்போது வெற்றி கிடைத்து இருக்கிறது. தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் சுமார் 4000 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவம், மருத்துவ மேல் படிப்புகளில் படிக்கும் வாய்ப்புக் கதவுகள் இதனால் திறந்துவிடப் பட்டிருக்கின்றன.

1951ஆம் ஆண்டு முதன்முதலாக இந்திய அரசியல் சட்டத்தின் முதல் திருத்தத்துக்கான போராட்டத்தின் மூலம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு நாடு முழுவதும் கிடைப்பதற்கும், பட்டியலின மக்களுக்கான கல்வி இட ஒதுக்கீடு நாடு முழுவதும் கிடைப்பதற்கான வாய்ப்பை பெரியார் உருவாக்கினார். அதே வகையில் மு.க ஸ்டாலின் அவர்கள் நடத்திய சட்டப் போராட்டம் தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி அனைத்து மாநில பிற்படுத்தப்பட்டோருக்கும் மருத்துவம், மருத்துவ உயர் பட்டப்படிப்புகளில் இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது. இது சமூக நீதிக்கும், தமிழ்நாடு அரசுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி. வெற்றிக்குப் பிறகு மாணவர் சேர்க்கை உரிமையை ஒன்றிய அரசு மாநிலங்களிட மிருந்து பறித்துக் கொண்டிருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

இரண்டாவது, சாலையில் ஆக்கிரமித்து நிற்கின்ற கோவில்கள் குறித்து நீதிமன்றம் வெளியிட்ட கருத்து ஆகும். இவைகள் சட்ட விரோதமாகக் கட்டப்பட் டிருக்கிறது, அகற்ற வேண்டும் என்று சொன்னால் அங்கே சங்கிகளும் பாஜகவினரும் உள்ளூரிலே குழுக்களை அமைத்துக் கொண்டும், நடைபாதை கோவில்களை வைத்து வியாபாரம் நடத்துகிறவர்களும் இந்த சட்டவிரோத கோவில்களுக்கு ஆதரவாக கலகம் செய்து கொண்டு இருக்கிறார்கள். இது குறித்த வழக்கு ஒன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வந்தது.

சென்னை ஓட்டேரி அருகே நடைபாதை கோவில்களை அகற்ற வேண்டும் என்ற வழக்கில் நீதிபதிகள் தெரிவித்திருக்கிற கருத்து மிகவும் முக்கிய மானது. நீதிபதிகள் கிருபாகரன், தமிழ்ச்செல்வி அமர்வு ஒரு முக்கிய கருத்தை பதிவு செய்திருக்கிறது.

“சாலைகளை ஆக்கிரமித்து கோவில்களைக் கட்ட வேண்டும் என்று எந்த மதக் கடவுளும் மனிதரிடம் கேட்ப தில்லை. ஆனால் மதத்தின் பெயரை எந்தெந்த வகையி லெல்லாம் தவறாக பயன்படுத்த முடியுமோ, அந்த வகை யிலெல்லாம் தவறாக பயன்படுத்துவது மனிதன் மட்டுமே” என்று அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த கருத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, போக்குவரத்திற்கு இடையூறான நடை பாதைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவில்களை அகற்றும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பு உச்சநீதிமன்றம் இப்படி ஒரு உத்தரவை பிறப்பித்திருந்த நிலையிலும்கூட இந்த நடைபாதை கோவில்கள், ஆக்கிரமிப்புக் கோவில்கள் அகற்றப்படாமல் இருக்கின்றன என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவது ஆகமத்திற்கு விரோதம் என்றும் தமிழில் அர்ச்சனை செய்வதே ஆகமத் திற்கு விரோதம் என்றும் ஸ்ரீதர் என்பவர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். தமிழக அரசு சார்பில் வாதாடிய வழக்கறிஞர் ஆகம விதிகளை முறை யாகப் படித்தவர்கள் எவரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஏற்கெனவே சிவாச்சாரியார்கள் வழக்கில் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பை சுட்டிக்காட்டி வாதிட்டுள்ளார். வழக்கை நீதிமன்றம் ஒத்தி வைத்ததோடு ஆகம விதிகளை முறை யாக படித்துவிட்டு மனுதாரர்கள் அடுத்த விசாரணைக்கு வரவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

ஆகமங்களை படித்தவர் அனைவருமே அர்ச்சகர் ஆக முடியும் என்பது சரியா? அல்லது ஆகமங்களை படித்து அர்ச்சகரா வதற்கே ஒரு குறிப்பிட ஜாதியினர்தான் இருக்க வேண்டும் என்பது சரியா? என்ற கேள்விக்கு விடை காண வேண்டிய நேரம் வந்துவிட்டது. காலங்கள் எவ்வளவுதான் மாறினாலும்கூட பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்க முடியும், சமஸ்கிருதம் மட்டுமே அர்ச்சனை மொழியாக இருக்க முடியும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கின்ற நிலையில் தான் பார்ப்பனர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

# அய்யப்பன் கோவிலும், மலையாள பார்ப்பனர்களும்

சபரிமலை அய்யப்பன் கோவில் மேல்சாந்தி (அர்ச்சகர்கள்) பதவிக்கு மலையாள பிராமணர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பம் கோரி, கேரள தேவஸ்வம் போர்டு விளம்பரம் செய்திருக்கிறது. உரிய அர்ச்சகர் தகுதி படைத்த பிராமணரல்லாத அர்ச்சகர்கள் இந்த அறிவிப்பை எதிர்த்து கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் துள்ளனர். வழக்கு நாளை விசாரணைக்கு வருகிறது. பிராமணர்களாக இருப்பது மட்டு மல்லாமல் மலையாள பிராமணர்களாகவே இருக்க வேண்டும் என்பதே நீண்ட கால பழக்க வழக்கம் என்றும் எனவே கேரள தேவஸ்வம் போர்டு இந்த பழக்க வழக்கத்தை மாற்றக் கூடாது என்றும் ‘அகில கேரள தாந்திரி மண்டலம்’ என்ற பார்ப்பன புரோகித அமைப்பு தேவஸ்தான நிர்வாக அதிகாரியை சந்தித்து வலியுறுத்தியுள்ளது.

ஏற்கெனவே இந்தப் பதவிக்கு விண்ணப் பித்திருந்த 6 பார்ப்பனரல்லாத அர்ச்சகர் களின் விண்ணப்பங்களை தேவஸ்வம் போர்டு நிராகரித்துள்ளது. கேரள நீதி மன்றமும் ஏற்கெனவே பார்ப்பனரல்லா தாரும் அர்ச்சகராகலாம் என்று தீர்ப்பு வழங்கி அதை உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ள நிலையில் நீதிமன்ற தீர்ப்பு எங்கே தங்களுக்கு பாதகமாக வந்து விடும் என்று பதறிய பார்ப்பன அர்ச்சகர்கள் தேவஸ்வம் போர்டுவை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். கேரளாவில் அறநிலையத் துறை அமைச்சராக இருப்பவரே பட்டியல் இனத்தைச் சார்ந்தவர்தான். ஆனாலும் கோவில் பழக்க வழக்கங்கள் என்ற பாதுகாப்பிற்குள் பார்ப்பனர் ஆதிக்கம் தொடர்ந்து பாதுகாக்கப் பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த 13 ஆண்டு களுக்கும் மேலாக அர்ச்சகர் பயிற்சி பெற்ற பார்ப்பனர் அல்லாத இளைஞர்களை இன்றும் ஆகமக் கோவில்களில் அர்ச்சகர் ஆக்க முடியவில்லை. ஏற்கெனவே இரண்டு பேர் மட்டும் ஆகம விதிகள் பின்பற்றப்படாத கோவில்களில்தான் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திமுக தனது தேர்தல் அறிக்கையில் அர்ச்சகர் பயிற்சிப் பெற்றவர்களை அர்ச்சகர் ஆக்கு வோம் என்று கூறியிருந்தாலும் 2015ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற தீர்ப்பு ஆகம விதிகளை மீண்டும் உறுதிபடுத்தப்பட்டு விட்ட நிலையில் இதை செய்வதற்கு பெரும் தடைகள் எழுந்து நிற்கின்றன. ஆகம விதிகளைப் பின்பற்றாத சிறிய கோவில்களில் மட்டும் முதல்கட்டமாக ஏற்கெனவே பயிற்சி பெற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அர்ச்சகர்களை அர்ச்சகராக்குவதாக அற நிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு பேட்டி அளித்திருக்கிறார்.

கேரள தேவஸ்வம் போர்டு பார்ப்பன, பார்ப்பனரல்லாத சட்ட நிபுணர்கள் மற்றும் தொடர்புடையவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. பெரியார் கருவறை நுழைவுப் போராட்டத்தை ஏன் கையில் எடுத்தார் என்பதை இப்போது புரிந்து கொள்ள லாம். பார்ப்பன ஆதிக்கத்தின் உயிர் மய்யம் அங்கேதான் இருக்கிறது என்பது மீண்டும் மீண்டும் உறுதிபடுத்தப்பட்டு வருகிறது.

பார்ப்பனரல்லாதார் ஏற்கெனவே கோயில் களில் அர்ச்சகளாகிவிட்டார்கள் என்றும் பெரியார் இயக்கத்தினர் கூறுவது பொய் என்றும் தொண்டை கிழிய கத்தும் அர்ஜுன் சம்பத்துகள் இந்த அய்யப்பன் கோவில் வழக்கை திரும்பி பார்ப்பது நல்லது.

# அரிதாரங்களை மக்கள் கலைத்து விடுவார்கள்

தமிழக பா.ஜ.க. தலைவராகியுள்ள அண்ணாமலை, தமிழகத்தில் பா.ஜ.க.வை வளர்க்க புதிய புதிய திட்டங்களை அமுல்படுத்தப் போகிறாராம்.

அ.இ.அ.தி.மு.க.வில் அதிருப்தியில் உள்ள ‘முக்குலத்தோர்’ ஜாதியினரை, கட்சிக்குள் இழுப்பது; ஆர்.எஸ்.எஸ்.காரர்களைக் கொண்டு கிராமங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்துவது; ஆர்.எஸ்.எஸ். ஆதரவு ‘என்.ஜி.ஓ.’ அமைப்புகளை கிராமங்களில் இறக்கி பிரச்சாரம் செய்வது என்று திட்டம் வைத்திருப்பதாக ‘தினமலர்’ எழுதுகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மன், வல்வில் ஓரி, பூலித்தேவன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை, இராணி மங்கம்மாள் போன்ற தலைவர்கள் வரலாறுகளை இளைஞர்களுக்கு அறியச் செய்யப் போகிறார்களாம்.

போகிற போக்கைப் பார்த்தால் ஒரு சில ‘தமிழ்த் தேசிய’ குழுக்கள் பயன்படுத்தும் ‘ஆயுதங்களை’ பா.ஜ.க.வினரும் கையில் எடுப்பார்கள் போலிருக்கிறது.

‘இந்துத்துவா’ கோட்பாட்டை தமிழ்மயமாக்கி விட்டால் தமிழ்நாட்டில் காலூன்றி விடலாம் என்று கணக்குப் போடுகிறார்கள்.

மோடி ஆட்சியின் ‘சாதனை’களைப் பட்டியலிட்டால் தங்களின் முகத்திரை கிழிந்து தொங்கும் என்பது அண்ணாமலைகளுக்குப் புரியத் தொடங்கிவிட்டது. எனவே ‘மோடி’யை நம்புவதைவிட ஒரு நூற்றாண்டு முன்பு வாழ்ந்த குறுநில மன்னர்களை நம்பினால் ‘கரை ஏறி’ விடலாம் என்று கணக்குப் போடுகிறது - பா.ஜ.க.! அய்யோ பாவம்!

‘நீட்’ தேர்வுக்கு உயிர்ப்பலியான அனிதா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளின் வரலாறுகளை சொல்ல மாட்டார்கள்.

மாநிலங்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமை, கல்வி உரிமை, விவசாய உரிமை, மீனவர் உரிமை போன்ற உரிமை பறிப்புகளை பேசவே முடியாது.

கொரானா 2ஆவது அலையை மிக மோசமாகக் கையாண்டதைச் சொன்னால் மக்கள் சட்டையைப் பிடித்து கேள்வி கேட்பார்கள். தடுப்பூசிகளை மாநிலங்களுக்கு வழங்குவதில் நடந்த தடுமாற்றம் குழப்பங்களைப் பேசவே முடியாது.

நாட்டின் பொருளாதார சீர்குலைவு குறித்து வாய் திறக்கவே முடியாது.


‘இந்து தர்ம ஆட்சியை நிறுவிட மீண்டும் ஜாதி - குல தர்மத்தைக் காப்பாற்றப் போகிறோம்’ என்று வெளிப்படையாகக் கூற முடியாது.

சமஸ்கிருதத்தை தேசியப் பண்பாடாக மாற்றி நாட்டை வேத காலத்துக்கு அழைத்துச் செல்லப் போகிறோம் என்று உழைக்கும் மக்களிடம் போய் சொன்னால், மக்கள் எதிர்வினை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

இந்துத்துவ அரசியலையோ மோடி சாதனைகளையோ பட்டியல் போட முடியாதவர்கள், குறுநில மன்னர்களை இழுத்து வந்து ஜாதியையையும் அ.தி.மு.க. அதிருப்தியாளர்களையும் அணி திரட்டி கட்சி வளர்க்கத் திட்டம் போடுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் பாலியல் குற்றம், பண மோசடி, கிரிமினல் வழக்குகளில் சிக்குவோரில் பா.ஜ.க.வினர் பெயர்களே ஊடகங்களில் சந்தி சிரிக்கிறது. இந்த நிலையில் ‘அண்ணாமலைகள்’ இப்படி புதிய வேடங்களைப் போட்டு மக்கள் மேடைக்கு வருகிறார்கள்.

### ஆரியர் இருக்கும் வரை!



என்று இந்த நாட்டில் ஆரியர்கள் கால் வைத்தார்களோ அன்று முதலே ஆரியர், திராவிடர் என்கிற வேற்றுமையும், ஆரியர் சங்கம், திராவிடர் சங்கம் என்கிற இயக்கங் களும், சுயமரியாதைக் கிளர்ச்சிகளும் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இவைகளை எவ்வளவோ பாடுபட்டு நமது எதிரிகள் மறைக்க முயன்றாலும் இயற்கைத் தத்துவம் மறைக்க முடியாமல் செய்து வருகிறது. எது வரையில் ‘ஆரியர்வேதம்’ என்பது நமது நாட்டில் இருக்குமோ, எதுவரை ‘ஆரியர் ஆதிக்கம்’, ‘ஆரிய தர்ம பிரச்சார சபை’, ‘வருணாசிரமதர்ம பிரச்சார சபை’ நமது நாட்டில் இருக்குமோ அதுவரை, நமது இயக்கம் அதாவது ‘திராவிடர் முன்னேற்ற இயக்கம்’, ‘சுயமரியாதை இயக்கம்’, ‘சமரச இயக்கம்’ இருந்து தீரவேண்டியதுதான்.

(குடிஅரசு – 26.06.1927)

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (5)

# பிரிட்டிஷ் ஆட்சியில் பார்ப்பனர்கள் பதவிகளைக் கைப்பற்றிய வரலாறு

**கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.**

விடுதலை இராசேந்திரன்

1947 ஆகஸ்ட் 15 - இந்தியாவுக்கு 'சுதந்திரம்' என்ற அறிவிப்பு வெளியானது. இது சுதந்திர நாள் அல்ல; துக்க நாள். பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரம் பார்ப்பன-பனியாக்களுக்கு கை மாறுகிறது (madeover) என்று ஓங்கி ஒலித்தது ஒரு குரல்; அது தான் பெரியாரின் குரல்.

வரலாற்று ஆசிரியர் ரோனாலட் சேகால் இந்தியா ஒரே நாடு அல்ல என்ற வரலாற்று உண்மையை இவ்வாறு கூறுகிறார்:

> "இன்றைய இந்தியா மொழிவாரி மாநிலங்களைக் கொண்ட ஓர் கூட்டாட்சி ஒன்றியம். வேறுபட்ட மக்கள், மொழி, கலாச்சாரம், மரபுகளைக் கொண்ட நாடு என்பதற்கு மொழி வழி மாநிலங்களே சான்றுகள். அதன் வேறுபாடுகள் மிக ஆழமாகத் தெரிகின்றன. வட இந்திய விவசாயி, உருவம், அளவு, நிறம், உடை, மொழி, மரபு ஆகியவைகளால் தென்னிந்தியன் மாறுபடுகிறான்.
>
> ஆரியத்தின் வழி வந்த இந்தியை, நாட்டின் ஆட்சி மொழியாக ஏற்க மறுத்த தென்னகத்துக்கு திராவிடர் களால் நடத்தும் மொழிப் போராட்டம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, வெளியார் படையெடுப்புகளை எதிர்த்து பூர்வகுடி மக்கள் நடத்திய போராட்டத்தையே பெரிதும் ஒத்திருக்கிறது" என்கிறார். (ஆதாரம்: Ronald Segal; "The Crisisis of India" 1971 p.20-21)

பிரிட்டிஷ் ஆட்சியைப் பயன்படுத்தி பார்ப்பனர்கள் மேலாதிக்கம் செலுத்த விரும்பியதையும் பிரிட்டிஷார் பார்ப்பனர்களைத் தங்களுக்கு இணையாக முன்னிறுத்த மறுத்த நிலையில் பார்ப்பனர்கள் பிரிட்டிஷ் எதிர்ப்பு முழக்கத்தை முன் வைத்தார்கள் என்றும், அதுபோது ஒடுக்கப்பட்ட மக்களோடு உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள மறுத்தார்கள் என்றும் ஆய்வாளர் எஸ். சந்திரசேகர் தென்னிந்திய வரலாற்றுக் காங்கிரசின் 22ஆவது மாநாட்டில் சமர்ப்பித்த ஆய்வில் சுட்டிக் காட்டுகிறார்.

> "தென்னிந்தியாவில் தேசிய இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் முதலாவது தலைமுறையைச் சார்ந்த பார்ப்பனர்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் கிடைத்த சலுகைகளையும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதே நேரத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களே தங்களோடு சமமான உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முயற்சித்தனர். அம்முயற்சி பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. இதனால் ஆத்திரம் அடைந்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கத் தொடங்கினர். ஆனால் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் தங்களுக்கு சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறியபோது அவர்களுடன் உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள பார்ப்பனர்கள் மறுத்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் சமமான மதிப்பு நிலைக்கு தாங்கள் வரும் வரை பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைப் பேசாமல் காத்திருக்க வேண்டும் என்று அறிவுரை கூறினர். இந்த சூழ்நிலையை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டனர்." (S. Chandrasekar study of Early National Phase in South India - Problem and Perspectives)

பார்ப்பன மேலாதிக்கத்துக்கு மற்றொரு சான்றையும் கூறலாம். 1937 ஆம் ஆண்டு மாகாண சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடந்தபோது 7 மாகாணங்களில் 6 மாகாண முதல்வர் பதவிகளை அபகரித்துக் கொண்டவர்கள் பார்ப்பனர்கள்.

அய்க்கிய மாகாணம் - கோவிந்த வல்லபந்த்; மத்திய மாகாணம் - ரவிசங்கர் சுக்லா; பீகார் - கிருஷ்ண சின்ஹா; பம்பாய் - பி.ஜி. கெர்; அசாம் - கோபிசந்த் பர்கவா; சென்னை - ராஜகோபாலாச்சாரி.

ஏழாவது மாகாணமான வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மிகப் பெரும்பாலோர் இஸ்லாமியர்களாக இருந்த காரணத்தாலும் அங்கு பார்ப்பனர்களே அறவே இல்லாததாலும் அம்மாகாண முதல்வராக டாக்டர் கான் சாகிப் என்ற இஸ்லாமியர் பதவிக்கு வந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியில் பார்ப்பன ஆதிக்கம் எப்படித் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது? பிரிட்டிஷாரை தன் வயப்படுத்திப் பார்ப்பனர்கள் எப்படி பதவிகளைப் பிடித்தார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.

அப்போதெல்லாம் சென்னை மாகாணத்தில் ஐ.சி.எஸ். அல்லாத பணிகளுக்கும் (non-I.C.S.), டெபுடி கலெக்டர் அல்லாத பணிகளுக்கும் (non-Deputy Collector) ஆட்களை நியமிக்கும் பொறுப்பு மாவட்டக் கலக்டரிடமே இருந்தது.

அந்தக் காலத்துக் கலெக்டர்களோ சர்வவல்லமை படைத்தவர்கள். தஞ்சைக் கலெக்டராக நியமிக்கப்பட்ட எச்.எஸ். தாமஸ் என்கிற வெள்ளைக்காரர் பதவியேற்கும்போது மூவேந்தர்களைப் போலத் தஞ்சை நகரத்துத் தெருக்களில் யானை மீது பவனி வந்ததாக 1888, ஜூலை 25ஆம் நாள் 'இந்து'வில் வந்த செய்தி கூறுகிறது.

- 1937ஆம் ஆண்டு 7 மாகாண சட்டசபை முதல்வர்களில் 6 பேர் பார்ப்பனர்கள்.
- உ.வே. சாமிநாத அய்யர் வெளியிட்ட தகவல்.
- வெம்பாக்கம் அய்யங்கார் குடும்பம் நடத்திய 'குடும்ப மாநாடு.

டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் கீழ்க்கண்ட செய்தியைக் குறிப்பிடுகிறார்:

> "உத்தமதானபுரத்தில் அண்ணா ஜோஸ்யரென்ற ஓர் அந்தணர் இருந்தார். அவர் ஜோஸ்யத்திலும் வைதிக வாழ்க்கையிலும் வேண்டியவற்றைப் பெற்றுக் கவலையின்றி ஜீவனம் செய்து வந்தார். நல்ல கட்டுள்ள தேகம் வாய்ந்த அவர் ஒரு நாள் எங்கோ ஒரு கிராமத்தில் சாப்பிட்டுவிட்டு மார்பு நிறையச் சந்தனமும், வாய் நிறையத் தாம்பூலமும், குடுமியிற் பூவும் மணக்க மணக்க உல்லாசமாக ஊருக்கு வந்து கொண்டிருந்தார். நடுவழியே பாபநாசத்தில் தஞ்சாவூர்க் கலெக்டர், 'முகாம்' செய்திருந் தார். அவ்வழியே வரும்போது கலெக்டரும் சிரஸ்தேதாரும் வெளியே நின்று கொண்டிருந்தனர். கலெக்டர் வெள்ளைக்காரர்; சிரஸ்தேதார் இந்தியர்.
>
> கலெக்டர் துரையினுடைய பார்வை அண்ணா ஜோஸ்யர் மேல் விழுந்தது. அவருடைய அங்க அமைப்பையும், ரிஷபம் போன்ற நடையையும், முகத்தில் இருந்த ஒளியையும் கண்டபோது கலெக்டர் துரைக்கு மிக்க ஆச்சரியம் உண்டாயிற்று. திடீரென்று அவரை அழைக்கச் செய்து சிரஸ்தேதார் மூலமாக அவரிடம் சில விஷயங்கள் கேட்கலானார்.
>
> கலெக்டர் : "உமக்குப் படிக்கத் தெரியுமா?"
>
> ஜோஸ்யர் : "தெரியும்."
>
> கலெக்டர் : "கணக்குப் பார்க்கத் தெரியுமா?"
>
> ஜோஸ்யர் : "அதுவும் தெரியும். நான் ஜோஸ்யத்தில் நல்ல பழக்கம் உடையவன். அதனால் கணக்கு நன்றாகப் போடுவேன்."
>
> கலெக்டர் : "கிராமக் கணக்கு வேலை பார்ப்பீரா?"
>
> ஜோஸ்யர்: "கொடுத்தால் நன்றாகப் பார்ப்பேன்."
>
> "அவர் கம்பீரமாக விடையளிப்பதைக் கேட்ட துரைக்குச் சந்தோஷம் உண்டாகி விட்டது. **ஜோஸ்யர் நன்றாக அதிகாரம் செய்யக் கூடியவரென்றும், ஜனங்கள் அவருக்கு அடங்குவார்கள் என்றும் அவர் நம்பினார். உடனே ஒரு கர்ணம் வேலையைக் கொடுத்து விட்டார்."**

- இப்படி போட்டியோ, தேர்வோ இல்லாத அந்தக் காலத்தில் உத்தியோகம் தானாக அவர்களை நாடி வந்தது!

உயர் பதவியில் ஒரு "பிராமணர்" நியமிக்கப் பட்டால் உடனே தனது நியமன அதிகார வரம்பிற்குட்பட்ட பிற பதவிகளிலும் தங்களது இனத்தாரைக் கொண்டு வந்து நிரப்புவதும், தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும்.

ஒருமுறை வருவாய்த் துறை வாரியம் ஆய்வு நடத்தியபோது, நெல்லூர் மாவட்டத்தில் ஜி.வெங்கட் ரமணையா என்கிற உயர் பதவி வகித்த பிராமணருக்கு உறவினர்களும், தொடர்புடையவர்களும் மாத்திரம் அந்தத் துறையில் 49 பேர் இருந்தது தெரிய வந்தது.

இந்தத் தகவல், வருவாய்த் துறை வாரியத்தின் 1854ஆம் ஆண்டின் மார்ச் மாதக் குறிப்பில் காணப்படுகிறது.

இதோ, மேலும் ஒரு உதாரணம் -

1890களில் செங்கற்பட்டிலும், சென்னை நகரிலும் தோன்றிய 'வெம்பாக்கம் அய்யங்கார் குடும்பம்' (புகழ் பெற்ற சர். பாஷ்யம் அய்யங்கார் வகையறா) ஆங்கிலேயர் ஆட்சியில் கிடைக்கும் உத்தியோகங்களையெல்லாம் நன்கு நுகர்ந்தது.

1861லிருந்து 1921 வரை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஐவர் சட்டசபை உறுப்பினர்களாகவும், இருவர் அட்டர்னி ஜெனரல்களாகவும், மூவர் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும், மூவர் ஸ்மால் காஸ் கோர்ட் நீதிபதிகளாகவும், மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத்தில் உதயமான ஆட்சியில் ஒருவர் முதல் உள்துறை அமைச்சராகவும், மூவர் மாநில அரசின் துணை செகரெட்டரி களாகவும் இருந்திருக்கின்றனர். மேலும் பலர் தாசில்தார்களாகவும் பப்ளிக் பிராசிகியூட்டர் களாகவும், டெபுடி கலெக்டர்களாகவும் இருந்தனர்.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் ஸ்ரீ வைஷ்ணவ பிராமணர்கள் (அய்யங்கார்கள்) நாடெங்கிலும் பெரும் பதவி வகித்து வந்ததால், வெம்பாக்கத்துக் காரர்கள் அவர்களோடு திருமண உறவு கொண்டு மதுரை, திருச்சி, தஞ்சை வரைக்கும் உறவின் முறையினரைக் கொண்டிருந்தனர். அந்தச் சமுதாயத்தில் நல்ல பிரகாசமான இளைஞர்கள் - உறவினர்கள் அல்லாதவர்களாக இருந்தாலும் மண உறவின் மூலம் அவர்களைத் தங்கள் சுற்று வட்டத்திற்குள் இழுத்துக் கொண்டனர்.

தங்களது குடும்பக் கட்டமைப்பையும், செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்வதற்காக 1890ஆம் ஆண்டி லிருந்து வெம்பாக்கத்துக்காரர்கள் ஆண்டுதோறும் தங்கள் **'குடும்ப மாநாடு'** ஒன்றைக் கூட்டித் தங்களது குடும்ப நலன் - கல்வி - வேலை வாய்ப்புகள் முதலியன குறித்து விவாதித்திருக்கின்றனர். இந்த மாநாட்டில் 50க்கு மேற்பட்டோர் கலந்து கொள்வது வழக்கமாம். உண்மையில் அந்தக் குடும்பம் ஒரு சிறிய சாதிச் சங்கமாகவே செயல்பட்டிருக்கிறது.

இதுபோலவே ஆங்கிலேயர் ஆட்சியின் உத்தியோகத் துறையை நன்கு பயன்படுத்திக் கொண்ட குடும்பம் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சர். சி.பி.இராமசாமி அய்யர் குடும்பமாகும். அவரது தாத்தா வட ஆற்காட்டிலிருந்து தஞ்சைக்குச் சென்றார். அவரது தந்தை தஞ்சையிலிருந்து சென்னைக்கு வந்தார். 1900ஆம் ஆண்டிற்குள் உறவின் முறை மூலமும், நட்பின் மூலமும் தஞ்சையிலிருந்து மலபார் வரை அவர்கள் ஆதிக்கம் நீடித்தது. சர். சி.பி. இராமசாமி அய்யர் சென்னை மாகாணத்தில் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரது உறவினர்களான சி.வி. குமாரசாமி சாஸ்திரி, (நீதிபதி ரௌலட்டோடு இணைந்து ரௌலட் சட்டத்தை இயற்றியவர்) விஸ்வநாத சாஸ்திரி ஆகியோர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளானார்கள்.

1870-71ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 164 பேர் பட்டம் பெற்றார்கள். அதில் 110 பேர் (அதாவது 67%) பிராமணர்கள்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## அ.இ.அ.தி.மு.க. ஜெயக்குமாருக்கு மறுப்பு

# திமுக வரலாற்றைத் திரிக்கப் பார்க்கிறதா?

பேராசிரியர் கருணானந்தம்

சட்டமன்றம் என்கிற போது, ஜெயக்குமார் ‘Legislative Assembly’ என்கிற சொல்லை மட்டும் வைத்துக் கொண்டு வாதம் புரிவதாக நான் நினைக்கிறேன். சட்டமன்றம் என்றால் Assembly என்று இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சட்ட மன்றம் என்றால் இந்தியாவில் அதிலும் குறிப்பாக சென்னை இராஜதானியில் சட்டமன்றம் என்பதற்கான வரலாற்றுப் பதிவுகள் இருக்கின்றன. முதலில் அதற்குப் பெயர் Legislative Council. அந்த Legislative Council என்பது காலனி ஆதிக்க காலத்தில் கவர்னருடைய Executive, நிர்வாகக் குழுவாகத்தான் இருந்தது. அந்த நிர்வாகக் குழுவில் சட்ட விசயங்களைப் பற்றி பரிசோதிப்பதற்காக ஒரு சட்ட உறுப்பினர் நியமிக்கப்படுவார். அனைவருமே நியமன உறுப்பினர்கள், அதிகாரிகள்; அங்கே மக்கள் பிரதிநிதிகள் கிடையாது. ஜெயக்குமார் யாருடைய குரலாக இருக்கிறார் என்பது நமக்குத் தெரியாது. 1930 க்கு மேல் இந்த சட்டமன்ற வரலாற்றைத் துவக்க விரும்பினால் அதற்கு முன்னால் இருக்கக்கூடிய வரலாறுகள் என்பது நமக்கு பெருமைப்படக்கூடிய வரலாறாக இல்லை என்று கூற வருகிறாரா என்று தெரியவில்லை.

1939 ற்கு முற்பட்ட சட்டமன்றத்தில் தான், Legislative assembly என்று சொல்லப்படுகிற சட்டமன்றத்தில் தான் ‘இந்து அறநிலையத்துறை’ உருவாக்கப்பட்டது. இட ஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது. பஞ்சமி நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்கள் மாநில அரசின் கட்டுப் பாட்டில் வந்தன. புதிய பல்கலைக் கழகங்களாக அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள், ஆந்திர பல்கலைக்கழகங்கள் வந்தன. தமிழுக்கு பல்கலைக் கழகங்களில் படிப்புக்கு இடம் கொடுக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளில் சமஸ்கிருதம் என்ற தடை நீக்கப்பட்டது. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. தொழிற் பேட்டைகள் அமைக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட பிரிவு மாணவர்களுக்காக மதிய உணவுத் திட்டத்தை கொண்டு வந்ததெல்லாம் அந்த காலகட்டத்தில் தான்.

சட்டமன்றத்தின் தோற்றம் என்பது நிர்வாக குழுவில் இருந்து வருகிறது. 1862ஆம் ஆண்டுதான் முதன் முதலாக இந்த நிர்வாக குழுவிலிருந்து இந்த சட்ட குழு ஒன்றினை உருவாக்குகிறார்கள். அதில் நியமன உறுப்பினர்களாக இந்தியர்களை நியமனம் செய்கிறார்கள். அதற்கு பட்ஜெட்டை கட்டுப்படுத்துகிற அதிகாரம் கிடையாது. அரசை விமர்சனம் செய்கின்ற அதிகாரம் கிடையாது. ஆலோசனைக் குழுவாக மட்டுமே செயல்பட்ட ஒன்று. 1892இல் அது விரிவாக்கம் செய்யப்பட்டது. 1909இல் வந்த சட்டத்தின் பெயரே ‘Indian council act’ என்பது தான். அந்த சட்டத் திலும் விரிவாக்கம் நடைபெற்றது. அது இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கியது. நாம் இங்கு சட்டமன்றம் என்று கூறுகிறபோது 1862இல் இருந்த சட்டமன்றத்தையோ 1892இல் இருந்த சட்டமன்றத்தையோ 1909ஆம் ஆண்டு விரிவாக்கம் செய்யப்பட்ட சட்ட மன்றத்தையோ நாம் ஒரு பெரிய நிகழ்வுக்கான அல்லது விழாவுக்கான நிகழ்வாக எடுத்துக் கொள்வதில்லை.

தேசிய இயக்கம் என்பது அதிகாரிகளாக இந்தியர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்றுதான் துவங்கியது. தமிழ் நாட்டில் மகாசபைகளையெல்லாம் கூறுகிறார்கள். மகா சபைகள் என்பது பிராமணர்கள் அரசாங்கத்தின் பிடியில் இருந்து தங்களை தனித்து வைத்துக் கொள்வதற்காக தங்களுக்குள் அமைக்கப் பெற்ற ஒரு மன்றம் அது. அதில் வாக்காளர்களும் பிராமணர்கள், தேர்ந்தெடுக்கப் படுபவர்களும் பிராமணர்கள். ஏனென்றால் பிராமணர்களை பிறர் கட்டுப்படுத்தக் கூடாது என்பதற்காக. அந்த தன்னாட்சி உரிமைகள் பிராமணர் அல்லாதவர்களுக்கு எந்த பேரரசு காலத்திலும் தரப்பட்டதாக பதிவுகள் இல்லை. தன்னாட்சி என்றால் செல்வாக்குப் பெற்ற ஒரு சிறு பிரிவிற்கு மட்டுமே வாய்ப்பு என்பதாக நடைமுறையில் இருந்தது. ஆனால் உண்மையில் தன்னாட்சி என்பது அந்த தேசத்தின் சமூகப் பிரிவுகளில் அனைத்துப் பிரிவினருக்கும் அனைத்தும் தருவது தான் தன்னாட்சி என்பது. 1919 வரையில் தன்னாட்சி என்பதன் அமைப்பிற்குள் நுழைந் தவர்கள் சில ஆதிக்கப் பிரிவுகளைச் சேர்ந்த சமூகத்தவர்கள் மட்டுமே. இஸ்லாமியர்கள் கூட படித்தவர்கள், நிலவுடமையாளர்கள் தான் ஆரம்பகட்டத்தில் இவர்களுடன் போட்டியிட்டார்கள். மற்றவர்களுக்கு அதில் இடமில்லை. அதுவும் சட்டமன்றம் தான். அந்த சட்டமன்றத்தில் மக்களால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவது கிடையாது. சிலர் நியமன உறுப்பினர்கள். சிலர் பணத்தின் அடிப்படையில், படிப்பின் அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள். இதை எப்படி ஒரு ஜனநாயக அமைப்பாக நாம் கருத முடியும்.

ஆனால் முதல் உலகப்போருக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், அரசியல் போராட்டங்கள் இவற்றை வைத்துக் கொண்டு வரலாற்றைப் பார்க்க வேண்டும். மாண்டேகு 1919 ஆகஸ்டு அறிக்கையில் இந்தியர்களுக்கு படிப்படியாக தன்னாட்சி அமைப்பை தரப்போகிறோம் என் று அறிவித்தார். இங்கிருந்த காங்கிரசார்கள் அதை உடனடியாக தாருங்கள் என்று கேட்டார்கள். இந்த அறிக்கைக்குப் பின் இந்திய அரசுச் சட்டம் என்பதாக ஒன்றினை இங்கிலாந்து பாராளுமன்றம் 1919 ஆம் ஆண்டு அறிவித்தது. இந்த அறிவிப்பின்படி சட்டமன்றத்தில் இந்தியர்களுக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. இந்த அமைச்சர்களுக்கு அரசை விமர்சிக்கவும் உரிமை வழங்கப்பட்டது. இந்த சட்ட மன்றத்திற்கும் முன்பிருந்த சட்டமன்றத்திற்கும் இருந்த வேறுபாடு இது தான். 1919 நவம்பரில் தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் அனைவரும் ஓட்டு போட்டு தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லை. ஆனால் இதை ஜனநாயகப் படுத்த வேண்டும் என்ற முனைப்பில் அப்போது போட்டியிட்ட நீதிக்கட்சி இருந்தது. தன்னாட்சி என்பது சிறு பிரிவினர் மட்டும் கொண்டதாக இருக்கக்கூடாது சமூகத்தில் இருக்கும் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பதற்காக நீதிக் கட்சியினர் பரப்புரை செய்தார்கள். இந்த மாற்றத்திற்காக இங்கிலாந்து வரை சென்று அவர்களை மாற்றிய பெருமை நீதிக் கட்சியினருக்கு உண்டு. குறிப்பாக திராவிடத் தலைவர்களில் முன்னோடியான டி.எம். நாயர். அவர் தனது சொந்த பணத்தை செலவழித்துக் கொண்டு இங்கிலாந்து இரண்டு முறை பயணம் செய்து, தனது உடல் நலத்தையும் கவலை கொள்ளாமல் இங்கிலாந் திலேயே உயிரையும் விட்டவர் டி.எம்.நாயர். அவரின் இறப்பிற்குப் பிறகு அவரின் கோரிக்கைகளை இங்கிலாந்து நாடாளுமன்றம் குறித்து வைத்துக் கொண்டது. அதன் பிறகு பலர் சென்றனர். இத்தனை இழப்பு களுக்கு பின்புதான் வருகின்ற சட்ட மன்றத் தேர்தலில் குறிப்பிட்ட இடங்களை பிராமணர் அல்லா தாருக்கு ஒதுக்குவது என்ற முடிவை எடுத்தார்கள். அதற்கு முன்பு வரை சட்டமன்றத்தில் 90% பார்ப்பனர்கள் இருந்த நிலை மாறி அனைத்து சமூகத்தினருக்கும் பிரிதிநிதித்துவம் கிடைத்தது. ஆங்கிலேயர்கள் கேட்டார்கள், எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறீர்கள், எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் பிராமணர்களிடமிருந்து பாதுகாப்பு கேட்கிறீர்களே இது ஏன் என்று வியந்து கேட்டார்கள். இதற்கு டி.எம்.நாயர் விளக்கம் அளித்தார். ‘இந்திய சமூகத்தின் இழிவான நிலையை நீங்கள் அறிய மாட்டீர்கள். என்றுமே பெரும்பான்மை மக்கள் ஒடுக்கப்பட்டும் உரிமை மறுக்கப் பட்டும் தான் இருக்கிறார்கள். இதை மாற்றுவதற்காகத்தான், ஜனநாயகப் படுத்துவதற்காகத்தான் நாங்கள் இட ஒதுக்கீடு கேட்கிறோம்’ என்று அவர் அழுத்தம் திருத்தமாக கூறினார். அதன் பிறகு தேர்தல் நடந்தது அதில் அனைத்து அனைத்து பிரிவினருக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. நீதிக்கட்சி 65 இடங்களைப் பெற்று வெற்றியடைந்தது. பார்ப்பனர்கள் 22 இடங்களைப் பெற்று தோல்வியடைந்தனர். இந்திய வரலாற்றில் 1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் அதன்மூலம் 1921 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்ட மன்றம் என்பது இந்திய வரலாற்றில் ஒரு மிகப் பெரிய மாற்றத்திற்கான துவக்கம். இதுதான் தென்னிந்திய சட்டமன்றத்தின் துவக்கம் என்று கூற வேண்டியது. இந்த துவக்கத்தை மறுத்து விட்டால் ஜனநாயகத்நை மறுப்பதாக ஆகிவிடும்.

ஜெயக்குமார் ஜனநாயகத்தை மறுக்கிறாரா ?

## இணையதள பொறுப்பாளர் விஜய்குமார் கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை



திராவிடர் விடுதலைக் கழக இணையதள பொறுப்பாளர் விஜய்குமார் மகன் பெரியார் பிஞ்சு இளம்பரிதியின் 8ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு 30.07.2021 அன்று ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு ரூ. 5000 நன்கொடை வழங்கினார்.

## கோபி இளங்கோ தொடர்ந்து வழங்கும் நன்கொடை

கழக ஏட்டுக்கு மாதம் ரூ.10,000/- நன்கொடை வழங்கி வருகிறார், கழக வெளியீட்டுப் பிரிவு செயலாளர் கோபி இளங்கோ. மூன்றாவது மாதமாக ரூ.10,000/- நன்கொடை வழங்கியுள்ளார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

1901லிருந்து 1911 வரை பட்டம் பெற்றவர்கள் 5,709 பேர். இதில் 4,074 பேர் (அதாவது 71%) பிராமணர்கள்.

- இதன் விளைவாக அரசாங்க உத்தியோகம் பிராமண வகுப்பாரின் ஏகபோக உரிமையாயிற்று.

1870லிருந்து 1918 வரை சட்டப் படிப்பில் (பி.எல்.) பட்டம் பெற்றவர்கள் 3,651 பேர். இதில் 2,686 பேர் பிராமணர்கள்.

அதுபோலவே ஆசிரியருக்கான பட்டப் படிப்பில் (எல்.டி.) 1,498 பேர் தேர்ச்சி பெற்றனர். இதில் 1,094 பேர் பிராமணர்கள், 207 பேர் இந்தியக் கிறித்துவர், 163 பேர் தான் இந்து பிராமணரல்லாதார்.

(ஆதாரம்: சி.ஜே. பேக்கர், டி.ஏ. விஷ்புரூக் மற்றும் எஸ். சரசுவதி எழுதிய ஆய்வு நூல்கள்)

ஆக, பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கம் என்ற ஒற்றைப் பார்வையோடுதான் பிரிட்டிஷ் ஆதரவு எதிர்ப்பு நிலைப்பாடுகளை எடுத்தனர். அப்போது தொழிலதிபர்களாக வளர்ந்து வந்த பனியாக்களோடு பார்ப்பனர்கள் கைகோர்த்துக் கொண்டார்கள். எனவே பெறப் போகும் சுதந்திரம் பார்ப்பன-பனியாக்களிடம் அதிகாரத்தை மாற்றும் சுதந்திரம் என்ற சரியான கணிப்புக்கு பெரியார் வந்தார். அதைத் தான் வரலாறும் உறுதிப்படுத்தியது.

(தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 05th August 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN